Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி வைகாசி மீ 28 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 13 (11 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 168

★ குடாநாட்டின் மீதான

இராணுவ நடவடிக்கை முற்றுப் பெற்று விட்டது

லலித் சொல்கிறார் இப்படி

கொழும்பு, ஜூன் 11

யாழ் குடாநாட்டில் தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் முற்றுப் பெற்று விட்டன.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இப்படித் தெரிவித்திருக்கிறார்.

நேற்று தொலைபேசி மூலம் ராய்ட்டருக்கு அவர் இதனைத் தெரிவித்தார். அவரது அந்தப் பேட்டியை பி. பி. சி. ஒலிபரப்பியது.

லலித் அத்துலத்முதலி மேலும் ராய்ட்டருக்குத் தெரிவிக்கையில், 'இராணுவத்தினர் தாம் மீண்டும் பிடித்துள்ள பகுதிகளில் தங்கள் நிலையைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பட்டினத்தைப் பிடிக்க வேண்டியது இல்லை.

அமைதி முயற்சிகளை மேற்கொள்ள இதுவே தருணம்.

எனவே மேலும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுவது தேவை இல்லை'– என்று கூறினார் என்றும் பி.பி.சி. தெரிவித்தது.

அமைச்சரின் கருத்துப் பற்றிய தனது கொழும்புச்செய்தியாளர் ஜோன் றெற்றியின்மதிப்பீட்டையும் பி. பி. சி. நேற்று

லலித்

ஒலிபரப்பியது.

அந்த மதிப்பீடு வருமாறு;

'ஒப்பரேஷன் லிபரேஷன்' முடிவடைந்து விட்டதாக அமைச்சர் கூறுகிறார். பிடிக்கப்பட்ட இடங்களில் தங்கள் நிலைப்பாட்டை பலப்படுத்திக் கொள்வதில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறுகின்றார். இந்த 'பலப்படுத்தல்' என்பதன் அர்த்தம் தெளிவாக இல்லை.

இராணுவத் தந்திரமா?

இக்கூற்று புதிய இராணுவத் தந்திரமாகவும் இருக்கக் கூடும்.

சென்ற 26ஆம் திகதி முழு அளவிலான தாக்குதல் ஆரம்பமானது. இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மதுரையில் துருப்புக்கள் உஷார் நிலை?

சென்னை, ஜூன் 11

20 ஆயிரத்துக்கும் அதிகமான இந்தியத் துருப்புகள் மதுரையில் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

நவீனரக விமானங்களும் இராணுவ வண்டிகளும் மதுரை நகருக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ-எ)

இராமேஸ்வரம் கடலில்

சென்னை, ஜூன் 10

இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஹமீதும் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 11

யாழ் குடாநாடு மீதான தனது இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு முடித்துக் கொண்டு விட்டதாக வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது அறிவித்திருக்கிறார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார் என்று யு. என்.ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

யாழ்ப்பாணத்தைச் சுற்றி வளைத்து இராணுவத்தினர் தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்று கூறப்படும் செய்திகள் ஆதாரமற்றவை என்றும் அமைச்சர் ஹமீது, திரு. டிக்ஸிற்றிடம் தெரிவித்ததாகவும் யு. என். ஐ செய்தி தெரிவித்தது. (இ-எ)

யாழ் சம்பவம் பற்றி அறிய சுயேச்சையான வசதி இல்லை என்கிறது அமெரிக்கா

வாஷிங்டன், ஜூன் 10

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சம்பவங்கள் பற்றி அறியக்கூடிய சுயேச்சையான வசதிகள் எமக்கு இல்லை.

இப்படி அமெரிக்கப் பேச்சாளர் சார்ள்ஸ் ரெட்மன் தெரிவித்தார்.

'யாழ்ப்பாணம் பொருளாதார முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் துன்பப்படுகின்றார்கள். அப்படி இருக்கும்போது இலங்கை அரசு ஒழுங்கு செய்த விமானத்தில் போய் பார்த்து விட்டு வந்த இராஜதந்திரிகளை ஆதாரம் காட்டி, விமானத் தாக்குதலினால் பெருமளவில் உயிர், உடைமைச் சேதம் ஏற்படவில்லை என்று முதல் நாள் கூறினீர்களே!.- என்று ஒரு செய்தியாளர் கேட்டதற்கே ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் ரெட்மன் முன்கண்டவாறு பதிலளித்தார். (இ-எ)

ராணுவம் அனுப்ப இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவு கோரிக்கை

சென்னை, ஜூன் 11

இந்திய அரசு இராணுவத்தை அனுப்பி இலங்கைத் தமிழரை பாதுகாக்க வேண்டும்–

இப்படி தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவு இந்தியப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

இத்தகவலை இளைஞர் பிரிவுத் தலைவர் ஏ. ஜெயமோஹன்தெரிவித்தார்.

இளைஞர் பிரிவு இன்று வியாழன் தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழருக்காக ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. (இ-எ)

சுபநேரம்

11-06-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:–
7.22 முதல் 8.52 வரை
ராகுகாலம்:–
1.22 முதல் 2.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
பூரணை விரதம்

★ இந்தியா உன்னிப்பாக கவனிக்கிறது

புதுடில்லி, ஜூன் 11

இலங்கை நிலைமை குறித்து இந்திய அரசு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வருகிறது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் நேற்றுமாலை இதனைத் தெரிவித்தார்.

யாழ் குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கைகளைத் தற்

(4ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவை எம். ஜி. ஆர் நேற்றுச் சந்தித்தார்

பேச்சு விவரம் வெளிவரவில்லை

புதுடில்லி, ஜூன் 11

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று மாலை பிரதமர் ராஜீவ் காந்தி

ராஜீவ்

யைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இலங்கை இனப் பிரச்சினை பற்றி இப் பேச்சுக்கள் அமைந்தன.

பேச்சுக்களின் விவரங்கள் வெளிவரவில்லை.

இதற்கு முன் இணை அமைச்சர் திரு. நட்வர் சிங்கை, எம். ஜி. ஆர். சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு ஒரு மணி நேரம் வரை நீடித்தது.

விமானம் மூலம் யாழ் குடாநாட்டுக்கு உணவுப் பொதிகள் போடப்பட்ட பின்னர் எழுந்துள்ள அரசியல் நிலைமைபற்றி திரு. நட்வர்சிங், முதலமைச்சரிடம் விரிவாக எடுத்துக் கூறினார்.

முதலமைச்சருடன் தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் சந்திப்பில் கலந்து கொண்டார்.

யாழ் குடா தமிழருக்கான மனிதாபிமான உதவிகளை இந்திய அரசு தொடர்ந்து வழங்க வேண்டும் என்று திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் இணை அமைச்சர் நட்வர்

எம். ஜி. ஆர்.

சிங்கிடம் கேட்டுக் கொண்டார்.

பாதிக்கப்பட்ட யாழ் மக்களுக்கு நிவாரண

(4 ஆம் பக்கம் பார்க்க)

வல்லையில் எம்மை ஓடும்படி கூறி சிப்பாய்கள் சுட்டனர்!

பூஸா சென்று விடுதலையான இளைஞர் ஒருவர் தகவல்

—வல்வைச் செய்தியாளர் சி. சுந்தரலிங்கம்—

வல்வெட்டித்துறை, ஜூன் 11

சம்பவ தினம் 400 பேர் வரை கோயில் ஒன்றில் வைத்துக் கைதானோம்.

எம்மை நடத்திக் கூட்டிக்கொண்டு சென்ற சிப்பாய்கள் வல்லையை அடைந்ததும் ஓடும்படி உத்தரவிட்டனர். அப்படி ஓடியபோது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கடந்த 26 ஆம் திகதி கைதாகி பூஸாவுக்கு அனுப்பப்பட்டு நேற்று விடுதலையான 88 பேரில் ஒருவரான இமையாணன் வாலிபர் ஒருவர் மேற்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இவர் தெரிவித்ததாவது:–

மே 26ஆம் திகதி அதிகாலை வல்லைவெளியூடாக இமையாணன் வந்த சிப்பாய்கள் இமையாணன் கலட்டிப் பிள்ளையார் கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த 15 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களைக் கைதுசெய்தனர்.

கைதான 400 பேரையும் மண்டான், தொண்டமனாறு, வல்லை வழியாக சிப்பாய்கள் நடத்திக்கொண்டுவந்தனர்.

வல்லையில் திடீரென இளைஞர்களை ஓடும்படி சிப்பாய்கள் பணித்தனர். இளைஞர்கள் கிலி கொண்டு சிதறி ஓடினர்.

ஓடியவர்கள் மேல் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் இமையாணனைச் சேர்ந்த அ. விசுவலிங்கம் எனும் 28 வயது இளைஞர் பலியானார்.

கிணற்றில் பிணம்

அவரது பிணத்தை வல்லைச் சுடலையிலுள்ள கிணற்றில்போட்டுவிட்டு கைதானவர்களை மீண்டும் மண்டானுக்குக் கூட்டிச்சென்றனர்.

முகாமில் எல்லோரினதும் கைகளையும் பின்புறமாகக் கட்டி குப்புறப் படுக்க வைத்தனர்.

அன்று முழுவதும் ஒரு துளி தண்ணீர் கூட எமக்கு குடிக்கக் கொடுக்கப்படவில்லை.

காறி உமிழ்ந்தார்

மண்டான் மினி முகாமில் சிப்பாய்களின் செய்கைகளால் சினமடைந்திருந்த 4 பிள்ளைகளின் தந்தை ஒருவர் சிப்பாய் ஒருவரின் முகத்தில் காறி உமிழ்ந்தார்.

முகத்தில் எச்சில் பட்டதால் எரிச்சலடைந்த சிப்பாய் அவர்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டார்.

துப்பாக்கிச் சன்னங்கள் உடலைத் துளைத்த போது அவர் ''தமிழீழம் வாழ்க'' என்று கோஷமெழுப்பியபடி மரணமானார்.

இப்படி மரணமானவர் இமையாணனைச் சேர்ந்த பு. சீனித்தம்பி. இவரது உடலை முகாமிலிருந்த இளைஞர்களான நாங்களே புதைத்தோம்,

அங்கிருந்து கைகள் சட்டிய நிலையில், 'டிரக்' வண்டிகள்மூலம் தொண்டமனாறு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டோம்.

அங்கே முகமூடி முன் அனைவரும் நிற்கவைக்கப்பட்டனர்.

பூஸாவுக்கு

பின்னர் அனைவரையும் காங்கேசன் துறைமுகத்துக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து கப்பலில் பூஸாவிற்குக் கொண்டு செல்லப்பட்டோம்.

இவ்வாறு விடுதலையான இமையாணன் இளைஞர் கூறினார்.

மண்டானைச் சேர்ந்த விடுதலையான வாலிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

டிக்ஸிற்---ஹமீத்மீண்டும் இன்றுசந்திப்பு

நிவாரண உதவி: இந்திய வழிமுறைகளை இலங்கை ஆராய்கிறது

கொழும்பு, ஜூன் 11

இந்தியாவின் நிவாரண உதவிகளை யாழ் குடா மக்களுக்கு விரைவாக வழங்கும் விஷயம் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் நேற்று வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுவைச் சந்தித்துப் பேசினார்.

பேச்சுக்கள் பற்றிய விவரங்களை திரு. டிக்ஸிற் பின்னர் தொலைபேசி மூலம் புதுடில்லியில் உள்ள இணைஅமைச்சர் நட்வர்சிங்குக்குத் தெரியப்படுத்தினார்.

இவ் விஷயம் குறித்து திரு. டிக்ஸிற், இன்று அமைச்சர் ஹமீதுடன் பேச இருக்கிறார்.

யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரண உதவிப் பொருள்களை வழங்குவது சம்பந்தமான இந்தியாவின் வழிமுறை விவரம் நேற்று திரு. டிக்ஸிற்றினால் அமைச்சர் ஹமீதிடம் கையளிக்கப்பட்டது. அது சம்பந்தமான முழு விவரங்களையும் ஆராய்ந்து இலங்கை இந்தியாவுக்குத் தெரிவிக்கும். (இ-எ)

பாங்ஷால் விதியில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன்11

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியால் சென்று கொண்டிருந்தோர் மீது நேற்று கோட்டை முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஒருவர் காயமடைந்தார். ஏனையோர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

சுப்பையா வடிவேல் (வயது 50) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

நேற்று மாலையும் இவ் வீதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாயினும் எவரும் காயமடையவில்லை. (இ-10)

முச்சந்தி முரளி

உண்மையாய்த் தான் நிறுத்துகினமோ அல்லாட்டால் யுத்த தந்திரமோ...!

சில வேளை இந்தியப் பிளேன்கள் வந்து போனதையொட்டி ஒரு தற்காலிக மரியாதையோ யாருக்குத் தெரியும்! உவையளை அளக்கேலாது பாருங்கோ!

அச்சுவேலியிலிருந்து பின்வாங்கிய ராணுவம் புதிய மினி முகாம் அமைப்பு

பலாலி, ஜூன் 11

அச்சுவேலிப் பகுதியில் இருந்து பின் வாங்கிய இராணுவத்தினர் வளலாயில் பலாலி—

அச்சுவேலிக்கு பஸ்சேவையும் நடந்தது

அச்சுவேலி, ஜூன் 11

நேற்று அச்சுவேலியில் இருந்து வாகனப் போக்குவரத்துகள் மேற்கொள்ளப்பட்டன.

அச்சுவேலிப் பகுதியில் இருந்து வழமைபோல தனியார் பஸ் சேவை யாழ்ப்பாணத்திற்கு நடைபெற்றதால் இடம்பெயர்ந்த மக்கள் பலர் தமது வீடுகளுக்குச் சென்றனர். (இ-11)

தொண்டமானாறு வீதியை அண்டி சில வீடுகளை மையமாக வைத்து புதிய மினி முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

புல்டோசர்கள் மூலம் மண் குவித்து முட்கம்பி அடித்து புதிய முகாம் பலப்படுத்தப்படுகிறது.

பலாலியில் இருந்து தொண்டமானாறு முகாமுக்கு இராணுவத்தையும் அவர்களது இராணுவத் தளபாடங்களையும் பாதுகாப்பாக எடுத்துச் செல்லும் முயற்சியாகவே பலாலி தொண்டமானாறு வீதியில் இம் முகாம் அமைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (இ-119)

பூஸா சென்றேரில் 88 இளைஞர்கள் நேற்று விடுவிப்பு

முகமூடியால் ஒருவர் தடுத்துவைப்பு

வல்வெட்டித்துறை, ஜூன் 11

வடமராட்சிப் பகுதியில் மே 26 ஆம் திகதிக்குப் பின் கைதாகி பூஸாவுக்கு கொண்டு செல்லப்பட்ட 6,000க்கு மேற்பட்ட இளைஞர்களில் 88 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை அவர்களது ஊர்களிலேயே படையினர் விடுவித்தனர்.

மற்ற இளைஞர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று படையினர் பெற்றோர்களிடம் தெரிவித்தனராம்.

89 இளைஞர்கள் பூஸாவிலிருந்து விடுதலை செய்யப்பட்டு இங்கே கொண்டுவரப்பட்டிருந்தனர்.

அதில் ஓர் இளைஞர் வயாவிளான் முகாம் முகமூடியால் அடையாளம் காணப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-ள-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில் அகதிகளாக உள்ள

ஒன்றரை இலட்சம் பேருக்கு ஒரு வார கால நிவாரண நிதி

யாழ்ப்பாணம் ஜூன் 11
வடமராட்சியில் அகதிகளாய் உள்ள ஒன்றரை லட்சம் மக்களுக்கு ஒரு வார உடன் நிவாரண உதவிகளை வழங்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் இந்த நிவாண உதவி வழங்கப்பட உள்ளது.

ஒருவருக்கு 55 ரூபா வீதமும், 8பேர்கொண்ட குடும்பத்திற்கு 200 ரூபா வீதமும் இந்த ஒரு வார நிவாரணநிதிஉதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்களை அரச அதிபர் வடமராட்சியிலுள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று சமூக சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-ள)

சிங்கராயர் வழக்கில் அரச சட்டத்தரணி தொகுப்புரை

கொழும்பு, ஜூன்11
வணபிதா ஆபரணம் சிங்கராயருக்கு எதிரான வழக்கில் அரச சட்டத்தரணி தனது தொகுப்புரையை நிகழ்த்தினர்.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தைத் தாக்கியவர்களுக்குப் புகலிடம் கொடுத்தார் என்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் வணசிங்கராயர்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெறுகிறது.

திங்கட்கிழமை அரச சட்டத்தரணி ஏ. ஆர். பெரேராதனது தொகுப்புரையை ஆரம்பித்தார்.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தைத் தாக்கியவர்கள் எங்கே வைக்கப்பட்டிருந்தார்கள் என்பது எதிரிக்குத் தெரியும். இதுபற்றிய தகவல் கொடுப்பது பாதுகாப்பானது அல்லஎன்று அவர் சொல்கிறார். தகவல் கொடுப்பவர்களுக்கு அரசு போதிய பாதுகாப்பு வழங்கமுடியாமல் இருந்தது என்றும் அவர் சொன்னார்.

தான் ஒரு கிறிஸ்தவ மதகுருவே ஒழிய பொலீஸாருக்குத் தகவல்கொடுக்கும் நபர் அல்ல என்று வணசிங்கராயர் தனது சார்பாக சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். இந்த விளக்கங்கள் எல்லாம் சட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இப்படி அரசு சட்டத்தரணி திரு. பெரேரா தொகுப்புரையில் தெரிவித்தார். (இ-ஏ)

மக்கள் முகம்

கலைவாணி சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன்11
கொக்குவில் மேற்கு பூரணிமரவீதி கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகிகள் தேர்வு திரு. சி.க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்: சிவ தர்மவள்ளல் க. கனகராசா, திரு. கா. சோமசுந்தரம்.

தலைவர். திரு.சி. வீரசிங்கம், துணைத்தலைவர்: திரு. கி. சிவராசா பொதுச் செயலாளர்: திரு. எஸ். கே. யோகநாதன், துணைப்பொதுச் செயலாளர்: திரு. க. சரவணமுத்து, பொருளாளர்: திரு. கு. கோபாலகிருஷ்ணன், துணைப்பொருளாளர்: திரு. க. முத்துராசா.

9 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ)

சுன்னாகம் பிரசைகள் குழு ஜனாதிபதிக்குத் தந்தி

சுன்னாகம், ஜூன் 11
யாழ் குடாநாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்குரிய காரணம் கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் வரும் லொறிகள் ஆணையிறவு தடுப்பு முகாமில் நீண்ட நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதே. உணவுப் பொருள்கள் கொண்டு வரும் லொறிகளை உடனடியாகச் சோதித்து தாமதமின்றி யாழ் குடாநாட்டுக்கு அனுப்ப ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறு கூறும் தந்திச் செய்தி ஒன்றை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு சுன்னாகம் பிரசைகள் குழு அனுப்பி உள்ளது.

தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (இ-27)

ஹர்த்தாலை சாதகமாக பயன்படுத்திய சிப்பாய்கள்

மட்டக்களப்பு, ஜூன் 11
யாழ் குடாநாட்டில் அரச படைகளின் தாக்குதல், இந்தியாவின் நிவாரண உதவிகளுக்கு தடைவிதிப்பு போன்ற அரசின் செயல்களைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற ஹர்த்தாலை ஆயுத படையினர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இம்மாதம் 1ஆம் திகதி கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தால் இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது.

இதற்கு ஆதரவாக ஹர்த்தாலுக்கு முதல் மாணவர்கள் 5நாள்பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஹர்த்தால் தினமான முதலாம் திகதி பூட்டப்பட்டிருந்த கடைகளுக்கு வந்த பொலீஸார் கடைகளில் மஞ்சள் கொடிகளை பறக்கவிட்டனர்.

அன்றைய தினம் அம்பாறையில் பௌத்த பிக்குமார் படுகொலைக்கு தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு ஹர்த்தாலை அம்பாறை துக்கதினத்துக்குப் பயன்படுத்தி வானொலி, தொலைக்காட்சி உட்பட அரசு வெகுஜன தொடர்புச் சாதனங்கள் தமக்கு சாதகமான செய்திகளை வெளியிட்டன. (இ-21)

பாதுகாப்புக் குழிகள் வெட்டுவதில் சிப்பாய்கள் தீவிரம்

வல்வெட்டித்துறை, ஜூன் 11
வடமராட்சியில் முகாமிட்டுள்ள சிப்பாய்கள் தம்மைப் பாதுகாக்க தமது இருப்பிடங்களில் பாதுகாப்புக் குழிகளை வெட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மந்திகை வைத்தியசாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் போன்ற இடங்களில் சிப்பாய்கள் பாதுகாப்புக் குழிகள் வெட்டுவதைப் பொதுமக்கள் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

குழிகளுக்குத் தேவையான மரக் குற்றிகளுக்கு முள்ளியிலுள்ள தனியார் காணிகளில் உள்ள தென்னைமரங்களை சிப்பாய்கள் வெட்டுகின்றனர். முள்ளியில் மினிமுகாம் ஒன்று இருப்பது தெரிந்ததே. (இ-ள-160)

காங்கேசன்துறை மாவிட்டபுர பகுதிகளில் நிலவும் பயங்கரம்

காங்கேசன்துறை, ஜூன் 11
காங்கேசன்துறை, மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையின் போது கொலையுண்ட பலரது சடலங்கள் அரை குறையாக எரிக்கப்பட்ட நிலையிலும், எரிக்கப்படாமலும் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன என்று சென்று வந்தவர்கள் கூறுகின்றனர்.

வீமன்காமம் டச்சு றோட்டிலும், வீமன்காமம் வெங்காயச் சங்க வீதியிலும், தையிட்டிப் பகுதியிலும் சடலங்கள் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

தையிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் வன்னியசிங்கம், சிவசாமிக் குருக்களின் மகன்ஒருவர் ஆகியோரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டன என்றும் ஏனைய சடலங்களை அடையாளம் காண்பதில் உறவினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறைப் பகுதிகளுக்கு எவரும் செல்லமுடியாதிருப்பதால் அங்கு இடம் பெற்ற சேதங்களை அறிய முடியவில்லை.

இராணுவத்தினர்பரவலாக அப்பகுதிகளில் நடமாடுவதாகக் கூறப்படுகிறது.

9 சடலங்களைத் தாம் கண்டதாகஅங்கு சென்று வந்தவர்கள் கூறினர். (இ-68)

பம்பாய் வெங்காயச் செய்கை

வட்டுக்கோட்டை, ஜூன் 11
வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அம்மன்கோவிலடிப் பகுதியில் இவ்வாண்டு பம்பாய்வெங்காயச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி பம்பாய் வெங்காயப் பயிர்ச்செய்கைக்கு உகந்த மண்வளமும், நீர்வளமும்கொண்டிருப்பதாக விவசாயப் பகுதியினர் தெரிவித்ததை அடுத்தே விவசாயிகள் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (இ-161)

அவதானிகளை அனுப்ப மட். பிரசைகள் குழுவும் கோரிக்கை விடுக்கிறது

மட்டக்களப்பு, ஜூன் 11
யாழ் குடாநாட்டுச் சம்பவங்கள் தொடர்பாக முரண்பாடான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருப்பதால் உண்மைநிலையை அறிய

விதித்தடை சோதனை

மட்டக்களப்பு,ஜூன் 11
மட்டக்களப்பு—வாழைச்சேனை வீதி கிரான் அதிரடிப்படை முகாம் எதிரே வீதித்தடை சோதனையில் படையினர் ஈடுபட்டுள்ளார்கள். (இ-21)

செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கு நேரடியாக விஜயம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து இது தொடர்பான கோரிக்கையை ஜனாதிபதிக்கு விடுத்துள்ளார்.

அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள தந்தியில் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (இ-21)

அச்சுவேலியில் தேடுவாரற்று கிடந்த சடலங்கள்

பலாலி, ஜூன் 11
அச்சுவேலி வீதிகளில் நான்கு சடலங்கள் தேடுவாரற்றுக் கிடந்தன.

செவ்வாய்க்கிழமை அச்சுவேலி மகாவித்தியாலயத்துக்கு அண்மையில், உலவிக்குளப் பிள்ளையார்கோவில் வீதியில் இரண்டு சடலங்களும், அச்சுவேலி வடக்கு ஊரெல்லைத் தெருவில் ஒரு சடலமும், காலானையில் வேறொரு சடலமும் கிடந்தன என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அத்துடன் வீதிகளிலும், வீடுகளிலும் கால்நடைகளும் பறவைகளும் ஆங்காங்கே இறந்துகிடக்கின்றன. இதனால் துர்நாற்றம் வீசுகிறது.

இரண்டு நாட்களாக அச்சுவேலியில் மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதல்களால் நூறு வீடுகளுக்கு மேல் சேதமாகியுள்ளன.

நாவற்காடு, அச்சுவேலி வடக்கு, பத்தமேனி, அச்சுவேலி தெற்குப் பகுதிகளிலேயே அதிகமானவீடுகள் ஷெல்லினால் சேதமடைந்தன. (இ-119)

தேசியக்கொடி

மட்டக்களப்பு, ஜூன் 11
மட்டக்களப்பு நகரிலுள்ள மணிக்கூண்டுக் கோபுர உச்சியில் பொலீஸார் தேசியக்கொடியைப்பறக்கவிட்டுள்ளனர். (இ-21)

கட்டாக்காலி நாய்கள் தொல்லையை நீக்க ஆணையாளருக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம்ஜூன், 11
கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் வீசர் நாய், கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றது.

இதனால் பொதுமக்கள் பெரும் அவதியடைந்து வருகின்றனர். ஒரே நாளில் மூன்று சிறுவர்களை வீசர் நாயொன்று பதம்பார்த்த சம்பவமும் உண்டு.

ஆகையால் இக்கட்டாக்காலி நாய்களின் தொல்லையைப் போக்க நடவடிக்கை எடுங்கள்,

இவ்வாறு கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானத்துக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளது.

இங்குள்ள குறுக்கு வீதிகளில் கட்டாக்காலி நாய்கள் கூட்டமாக நின்று வீதியால் செல்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதுடன் கடிக்கத் துரத்தும் நாய்களிடமிருந்து தப்புவதற்கு ஓட்டப்பந்தயம் நடத்த வேண்டிய பரிதாபநிலையும் ஏற்பட்டுள்ளது— என்றும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

கூட்டம் ஒத்திவைப்பு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் காலவரையறை இன்றி பின்போடப்பட்டுள்ளது.

இக்கூட்டம் கடந்த 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்பட இருந்தது. (இ-161)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

தெல்லிப்பளை, இளவாலையில் இடம் பெயர்ந்தோர் விவரம் பிரசைகள் குழு கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூன்11
சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் தெல்லிப்பளை, வடமேற்கு இளவாலைப் பிரசைகள் குழுவின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை உடனடியாக தெல்லிப்பளை வடமேற்குக் கிராம சேவை அலுவலருடன் தொடர்பு கொள்ளும்படி தெல்லிப்பளை வடமேற்கு இளவாலை பிரசைகள்குழு கோரி உள்ளது.

இது தொடர்பாக தெல்லிப்பளை வடமேற்கு இளவாலை பிரசைகள் குழு இணைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

7- 6- 1987 அன்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகவும், தெல்லிப்பளை வடமேற்கு இளவாலைப் பிரசைகள் குழுவின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இராணுவம் புகுந்துள்ளதன் காரணமாகவும் இங்குள்ள மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து சென்றுள்ளார்கள். எம்மால் அவர்களோடு தொடர்பு கொள்ள முடியவில்லை.

அதனால் அவர்கள் எங்கிருந்தாலும், விவரங்களை தெல்லிப்பளை வடமேற்குக் கிராம சேவை அலுவலர் இளவாலை என்னும் விலாசத்துக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம்.

கிராம சேவையாளரோடு 24 மணித்தியாலமும் தொடர்பு கொள்ளலாம்.

அரசாங்க அதிபர், தெல்லிப்பளை (தெல்லிப்பளை வடமேற்குக் கிராம சேவை அலுவலருக்கூடாக) என்னும் தலைப்பிட்டு எழுதவும்.

அனுப்பவேண்டிய விவரங்கள்:- பிரதான குடியிருப்பாளர் உட்படக் குடும்ப அங்கத்தவர்களின் முழுப்பெயர்கள், உறவுமுறை, வயது, பால், தொழில், தேசிய அடையாள கார்ட் இலக்கம், முன்னைய முகவரி, இப்போதைய முகவரி, பிரதான குடியிருப்பாளரின் ஒப்பம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிக்கு மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன்11
வடமராட்சிப் பகுதிக்கென 750 பைக்கெட் மா அனுப்பப்பட்டுள்ளதாக உணவுத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து பெறப்பட்ட இந்த மா கரவெட்டி உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-ள)

கோயிலுக்கு குழாய்க் கிணறு

திருநெல்வேலி, ஜூன்11
கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்திற்கு புதிய குழாய்க் கிணறு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. (இ-143)

மீண்டும் இடம் பெயர்வு

சுழிபுரம் ஜூன் 11
அச்சுவேலி, வடமராட்சிப் பகுதிகளில் இருந்து சுழிபுரம், மூளாய்ப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தவர்களில் பலர் மீண்டும் வேறு இடங்களுக்கு இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

சுழிபுரம், மூளாய்ப் பகுதிகளில் திங்கட்கிழமை இரவு இடம் பெற்ற பீரங்கித் தாக்குதல்களே இதற்குக் காரணம். (இ-ள-28)

வேலிகளைப் பிரித்துக் கொண்டு இராணுவம் வீட்டுக்குள் வந்தது

வல்வெட்டித்துறை, ஜூன் 11
வேலிகளைப் பிரித்துக் கொண்டு வீட்டுக்குள் வந்த இராணுவத்தினர் மனைவி, பிள்ளைகள் குழறியழ என்னைக் கூட்டிச் சென்றனர்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த நடராசா பாலகிருஷ்ணன் (வயது 38) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி காலை 10 மணி இருக்கும் நானும் குடும்பத்தவரும் வீட்டில் இருந்தோம். எமது வீட்டின் நாலா புறத்தாலும் வேலிகளைப் பிரித்துக்கொண்டு இராணுவத்தினர் வீட்டினுள் வந்தனர்.

என்னைப் பிடித்து இழுத்தபோது எனது பிள்ளைகளும் மனைவியும் சத்தமிட்டு அழுதனர்.

அப்போது இராணுவத்தினர் அவர்களை தோக்கி அழவேண்டாம் என்றனர். தாம் அண்மையில் வைத்து விசாரித்துவிட்டு விடுவிப்பதாகக் கூறி என்னைக் கூட்டிச் சென்றனர்.

மாயக்கை வண்ணன் குளத்தடி வயலுக்கு என்னைக் கொண்டு சென்றனர்.

புலிகளின் இடங்களைக் காட்டும்படியும் பிரபாகரனின் இருப்பிடத்தைக் காட்டும்படியும் என்னைக் கேட்டனர்.

நான் சாதாரண விவசாயி என்று கூறினேன். என்னைச் சுடவேண்டாம் என்று கெஞ்சினேன்.

நான் பிள்ளைகுட்டிக்காரன் என்று கூறியபோதும் அவர்கள் என்னைச் சுட்டார்கள்.

அவர்கள் சென்றதும் வழியில் சனநடமாட்டம் தெரியவே உதவிக்குச் சத்தமிட்டேன். வழியால் சென்றவர்கள் என்னை மந்திகை வைத்தியசாலையில் சேர்த்தார்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-160)

இலங்கையின் தவறான வெளியுறவுக்கொள்கை குறித்து அனுரா

கொழும்பு, ஜூன் 11
இலங்கை அரசின் தவறான வெளியுறவுக் கொள்கை காரணமாகத்தான் இந்தியா தனது விமானங்களை யாழ் குடாவுக்கு அனுப்பி உணவுப் பொதிகளைப் போட்டது.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

கம்புறுப்பிட்டியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் குற்றஞ் சாட்டினார்.

யு.என்.பிக் கட்சியினர் பிரதமர் பிரேமதாஸாவும் இந்திய அரசாங்கத்தை குற்றஞ் சாட்டுவதைத் தீவிரப்படுத்தியுள்ளார். இது நாட்டுக்கு நன்மை பயக்காது. இப்படியான பேச்சுக்களினால் இரு நாட்டு உறவுகள் இன்னும் மோசமடையும்.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்தார். (இ-ள)

திருமண அழைப்பிதழ்

மணமகன்: பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக்குருக்கள்
(ஆதீனகர்த்தா – ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், திருகோணமலை.)

மணமகள்: சௌபாக்கியவதி சகுந்தலா

காலம்: பிரபவ வருஷ வைகாசி மீ 29ஆம் திகதி (12.06.87) வெள்ளிக்கிழமை

சுபமுகூர்த்தம்: காலை 8 மணி 31 நிமிஷம் முதல் 10 மணி 27 நிமிஷம் வரையில் வரும் கற்கடகலக்கினம்

இடம்: பங்குரு கந்தசுவாமி கோவில், வட்டுக்கோட்டை.

சமாவர்த்தனம்: அன்று காலை 6 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

★ மணமகள் இல்லத்தில் நடைபெறும் மாங்கல்யதாரண வைபவத்தில் தாங்கள் குடும்பசகிதம் வந்து சிறப்பித்து மணமக்களுக்கு நல்லாசி வழங்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லம்:
திருமதி சோமாஸ்கந்த ஐயர்,
கந்தசுவாமி கோவில்,
அடைக்கலத்தோட்டம்,
வட்டுக்கோட்டை.

மணமகள் இல்லம்:
திரு. திருமதி சடாக்ஷரக்குருக்கள்,
பங்குரு கந்தசுவாமி கோவில்,
வட்டுக்கோட்டை

(3203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

எந்த மனிதனும் எப்போதும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்க முடியாது. எவனும், ஆயுள் முழுவதும் துயரத்துக்கு ஆளாகமாட்டான்.

— அன்னை சாரதாதேவி

உதயன்

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
11.6.1987 த.பெ.இல: – 23

தடுக்க உண்டு வழி!

முன்னுக்குப் பின் முரணாகப் பேசுதல். பிரபல அரசியல்வாதி ஆவதற்கு, அரசாங்கத் தலைவன் ஆவதற்கு, மந்திரி ஆவதற்குத் தேவையான முக்கிய தகுதிகளில் மேற்கண்டது மிகவும் அவசியமானதும், பிரதானமானதும் ஆகும்.

ஸ்ரீலங்கா அரசியலில், அரசாங்கத்தில் பிரபல்யம் அடைந்திருப்பவர்கள் அல்லது முன்னுக்கு நிற்பவர்கள் எல்லோருக்கும் இந்தத் தகுதி தாராளமாக உண்டு!

அந்த வகையில் நாட்டின் தலைவனான ஜனாதிபதியின் குறிப்பிட்ட தகுதி எத்தகையது என்பதை மதிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. அதுவும் ஐம்பது வருட கால அரசியல் அனுபவம் உள்ள ஒருவர், முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதில் எவ்வளவு கைதேர்ந்தவராக, திறமை உள்ளவராக இருப்பார் என்பதை அளவிடத்தான் முடியும்?

இரண்டு வாரங்களுக்கு முன், யாழ் குடாநாட்டில் நடந்தகாட்டுமிராண்டித் தனமான இராணுவத் தாக்குதலை நடத்த உத்தரவிட்ட இரண்டொரு நாட்களில் அவர் பேசியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

நான் புத்த சமயத்தைக் கடைப்பிடிப்பவன். புத்த சமயம் கொலை செய்தல் போன்ற வன்செயல்களை நிராகரிக்கின்றது. ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு பகுதியினரைக் கொலை செய்யுமாறு உத்தரவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது — என்றவாறு அவர் அப்போது கூறியிருந்தார்.

ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அவர் பேசியிருப்பது அதற்கு நேர்மாறானது; முன்னுக்குப் பின் முரணானது.

''ஓர் இந்தியனோ, ஓர் இலங்கையனோ துன்புறுவதை நான் விரும்பவில்லை''— என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

ஓர் இந்தியன் கூடத் துன்புறுவதை விரும்பாத ஒருவர், தனது சொந்த நாட்டு மக்களைக் கொல்லுமாறு எந்த மனதுடன் உத்தரவிட்டிருக்க முடியும்?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போராளிகள் மீது இராணுவத் தாக்குதல் நடத்தினால் பொதுமக்கள் அழிவார்கள். அதனைத் தவிர்க்க முடியாது என்று கூறியவரும் சாட்சாத் ஜனாதிபதியே!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு பகுதியினரைக் கொலை செய்யுமாறு உத்தரவிடும் போது அது குடாநாட்டின் அப்பாவிப் பொதுமக்களையும் சேர்த்துத்தான் கூறப்பட்டது என்பது சாதாரண தர்க்கவியல் உண்மை.

தலைவன் போட்ட ஒருபடி உத்தரவை, ஒன்பது படிகளாக அதிகரித்து ஆயுதப்படையினர் வடமராட்சியிலும், வலிகாமம் வடக்கிலும் நடத்திய காட்டுமிராண்டித் தனமான அட்டூழியங்கள் கல்நெஞ்சத்தையும் கசியவைப்பவை.

அங்கு நடந்த அரச பயங்கரவாதத்தின் உண்மை உருவம் முழுமையாகத் தெரியவரும் போது, அசுரத் தனத்தின் முழுப்பரிமாணமும் உலகுக்குத் தெரிய வராமலா போகும்?

மெலியாரை வலியார் வருத்தின், வலியாரைத் தெய்வம் வருத்தும் என்பது பொய்ப்பதில்லை.

தமிழ் மக்களை வருத்தும் ஸ்ரீலங்கா அரசை இந்தியாவின் 'உணவு உதவி' என்ற தெய்வம் இப்போது வருத்துகிறது. அதனைப் பெரிதாக, படை எடுப்பாகக் கருதிக் கொண்டு இந்தியாவுடன் போரிடும் பலம் தம்மிடம் இல்லை என்று ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்.

பாரதம் ஸ்ரீலங்கா மீது படை எடுப்பதாகவோ அல்லது ஆக்கிரமிப்பதாகவோ இன்னும் அறிவிக்கவில்லை. அப்படியிருக்க ஜனாதிபதி யுத்தம் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார்.

ஓர் இந்தியனையோ அல்லது இலங்கையனையோ அவர் உண்மையாகவே துன்புறுத்த விரும்பவில்லை என்றால்—

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து, அவர்களின் மனித உரிமைகளை வழங்கி காட்டுமிராண்டித் தனத்தை உடனடியாகவே நிறுத்தி விடலாம். அது பெரிய கஷ்டமான காரியமல்ல.

இராணுவத்தை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து உடனே வாபஸ் பெற்று இந்திய மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சின் மூலம் அரசியல் தீர்வு காண்பது அப்படி எதுவும் கடினமான காரியமும் அல்ல. மனம் உண்டானால் இடமுண்டு.

நாடும் மக்களும் அழியாமல் தடுக்கவும் அதுவே ஒரு வழி.

வளைகுடா பிரச்சினைக்கு அரசியல் தீர்வே தேவை

வெனிஸ் பிரகடனம் வலியுறுத்துகிறது

வெனிஸ், ஜூன் 10

வளைகுடாப் பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வே காணப்படவேண்டும்என்று வெனிஸ் பிரகடனம் வலியுறுத்தி உள்ளது.

மூன்று தினங்கள் வெனிஸ் நகரில் நடந்து முடிந்த கைத்தொழில் நாடுகளின் வெனிஸ் உச்சி மாநாட்டின் இறுதியில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

வெனிஸ் பிரகடனம் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்டது.

1. பொருளாதார ஒத்துழைப்புத் திட்டம் ஒன்றை உலக நலனுக்காக அமுல் நடத்துவது.

2. சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக கூட்டாக நடவடிக்கை எடுப்பது.

3. ஈராக் — ஈரான் யுத்தத்துக்கு ஒரு முடிவு கட்டுவது.

4. வளைகுடா பிரச்சினைக்கு விரைந்து ஓர் அரகியல் தீர்வு காண்பது.

(இ–எ)

நிரந்தரத் தீர்வு காண முயற்சி

வாஷிங்டன், ஜூன் 10

வளைகுடாப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நடவடிக்கைகளை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும்நிரந்தர உறுப்பு நாடுகள் மேற்கொண்டுள்ளன.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகியனவே இந்த ஐந்து நாடுகளும் ஆகும்.

(இ–எ)

ஜனாதிபதியை மக்கள் தெரிவுசெய்யவேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம்

சோல், ஜூன் 10

ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கோரி தென் கொரியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

எதிர்க் கட்சிகள், மாணவர் அமைப்புக்கள் இக்கிளர்ச்சியை நடத்துகின்றன.

இப்பொழுது ஜனாதிபதி தெரிவு, அதற்கு என்று உள்ள தேர்தல் மன்றங்கள் ஊடாகவே நடத்தப்படுகின்றது.

இந்த முறை மாற்றப்பட்டு மக்கள் நேரடியாக ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன.

சட்டவிரோத ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்களை பாதுகாப்புப் படையினர் அனுமதிக்கமாட்டார்கள் என்று அரசு அறிவித்திருக்கிறது.

லிபியாவில் பண்டமாற்று முறை

திரிபொலி, ஜூன் 10

லிபியாவில் பண்டமாற்று முறை புகுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு வர்த்தகத்துக்கு மட்டுமே பண்டமாற்று முறை அமுல் நடத்தப்படும்.

பொருளாதாரக் கஷ்டத்தைத் தவிர்க்கவே இந்த நடைமுறை என்று லிபிய ஜனாதிபதி கேர்ணல் கடாபி அறிவித்திருக்கிறார்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, தேயிலை, சீனி ஆகியவற்றைக் கொடுத்து உள்ளூர் உற்பத்தியான கோதுமை, பார்லி அரிசி ஆகியவற்றை வாங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ–எ)

வாடகை கொடா இயக்கத்தை முறியடிக்க முயற்சி

ஜோஹன்னஸ்பேர்க், ஜூன் 10

கறுப்புஇனத்தவர்கள் நடத்தும்வாடகை கொடா இயக்கத்தை நசுக்கும் சட்ட மூலம் ஒன்று தென் ஆபிரிக்காவின் வெள்ளை இன அரசினால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச் சட்ட மூலத்தின்படி வாடகைப் பணத்தை குடியிருப்பாளர்களின் சம்பளத்தில் இருந்து சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் கழிக்க இடமளிக்கின்றது.

கறுப்பு இனத்தவர் இந்த வாடகை கொடா இயக்கத்தை கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து நடத்தி வருகின்றனர்.

இதனால் 13½ கோடி டாலர் அரசுக்குக் கிடைக்க வேண்டியுள்ளது. (இ–எ)

குஜராத்தில் விதி விபத்துகளில் 14பேர் மரணம்

புதுடில்லி. ஜூன் 10

குஜராத் மாநிலத்தில் நடந்த இரண்டு வீதி விபத்துகளில் 14 பேர் உயிரிழந்தனர்.

பலன்பூரில் நடந்த விபத்தில் பயணிகள் பஸ் ஒன்றும் ஜீப் ஒன்றும் மோதிக்கொண்டன.

இதில் ஜீப்பில் பயணம் செய்த 9 பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்களில் இரண்டுபேர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர்.

இன்னும் ஒருவிபத்தில் 3பேர் அந்த இடத்தில் உயிரிழந்தனர். மேலும் ஒருடிரக்கும் எண்ணெய் பவுஸர் ஒன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்டன. (இ–எ)

வெளி உலகில்

மகாராணியைச் சந்திக்க மீண்டும் முயற்சி

லண்டன், ஜூன் 10

பதவி கவிழ்க்கப்பட்ட பிஜியின் பிரதமர் டாக்டர் பவித்ரா எலிஸபத் மகாராணியை நேரிற் சந்தித்து முறையிடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறார்.

டாக்டர் பவித்திராவைச் சந்திக்கப்போவது இல்லை என்று மகாராணியார் ஏற்கனவே அறிவித்து விட்டார்.

இருந்தும் எப்படியாவது மகாராணியாரைச் சந்தித்து பிஜி நிலைமை பற்றி முறையிட அனுமதி தருமாறு மீண்டும் விண்ணப்பித்திருக்கிறார் டாக்டர் பவித்திரா.

[இ–எ]

குவைத் எண்ணெய்க்கப்பலுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டுகோள்

பஹ்ரைன்; ஜூன் 10

குவைத் நாட்டு எண்ணெய்க் கப்பல்களுக்கு பாதுகாப்பளிக்க பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குவைத் எண்ணெய்க் கப்பல்களை பிரிட்டன், பிரான்ஸ் கொடிகளுடன் செல்ல இடமளிப்பதாக இத்திட்டம் அமைந்துள்ளது.

குவைத்நாடு விடுத்துள்ளதாகக் கூறப்படும் இந்த வேண்டுகோள், பிரிட்டனுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

இப்படி பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ–எ)

போலந்தில் பாப்பரசர்

வார்ஸோ, ஜூன் 10

மனித உரிமைகள் உலகில் பேணப்பட வேண்டும்—

பரிசுத்த பாப்பரசர் தமது போலந்து விஜயத்தின் போது மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

தனது தாயகமான போலந்தில் பரிசுத்த பாப்பரசர் விஜயம் மேற்கொண்டிருக்கிறார்.

போலந்து ஜனாதிபதி ஜருவெல்ஸ்கி, பாப்பரசரைச் சந்தித்தார்.

புளொட் உறுப்பினராக இருந்தேன்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான வழக்கில் ஹென்றி பெரேரா

செரமும்பு, ஜூன் 11

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) உறுப்பினராக நான் இருந்தேன், இப்படி ஹென்றி பெரேரா, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தார்.

குண்டுகள் வைத்திருந்ததாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஹென்றிப் பெரேராமீது இவ்வழக்கில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

லெனின், ரத்தினம், விஸ்வன் ஆகிய பெயர்களும் ஹென்றி பெரேராவுக்கு உண்டு.

ஹென்றி பெரேரா மேலும் சொன்னதாவது:–

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வன்செயல் போராட்டத்தில் புளொட் ஈடுபட்டிருந்தது என்பது எனக்குத் தெரியும்.

அந்த ஒரு வழியால் தான் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியும். முன்னர் பல அமைப்புக்களை நாம் உருவாக்கியிருந்தோம். அவற்றில் ஒன்றுதான் 'புளொட்' இயக்கம்.

இதுபற்றிய விவரங்களை நான் வெளியிட விரும்பவில்லை. அப்படி வெளியிடுவது பொலீஸாருக்கு உதவுவதாக இருக்கும்.

எனது தலைமையிலான சிவப்புச் சிப்பாய்கள் இயக்கம் போராளி அமைப்பு அல்ல. அது ஒரு கல்விவட்டம்.

புளொட்டினதும் சிவப்புச் சிப்பாய் இயக்கத்தினதும் நோக்கம் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதே.

ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்தக் கூடிய பலம் வாய்ந்ததாக சிவப்புச்சிப்பாய் இயக்கம் (Red Soldiers Organisation) இல்லை.

எனது இயக்கத்தின் நோக்கம் இந்து சமுத்திரத்தில் உள்ள ஸ்ரீலங்கா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளை இந்துசமுத்திரக் குடியரசுகள் யூனியன் என்ற அமைப்பின் கீழ் கொண்டுவருவதே.

அரசியல் அதிகாரத்தை மாற்றவேண்டியது அவசியமாகின்ற போது ஆயுதப் போராட்டம் உருவாகிறது.

இப்படி ஹென்றி பெரேரா சொன்னார்.

மேல் விசாரணை அடுத்த மாதம் 1 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ–எ)

குதிரைப் பந்தயம் சட்ட ரீதியானது

கொழும்பு, ஜூன் 11

குதிரைப்பந்தய பத்திரிகைகளை வெளியிடுவதற்கு அனுமதியளிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

60 பேர் ஆதரித்து வாக்களித்தனர். ஐவர் எதிர்த்து வாக்களித்தனர்.

ஹெலி உபயோகம் பற்றி ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 11

ஹெலிக்கொப்டர் உபயோகிப்பதைக் குறைக்கும்படி அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகமாக ஹெலிக் கொப்டர்கள் பயன்படுத்தப்பட வேண்டியிருப்பதே இதற்குக் காரணம் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். (இ.எ)

சட்ட மூலத்தின் மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில்—

நாட்டில் குதிரைப்பந்தயம் எப்போதுமே தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. பந்தய முடிவுகள் அடங்கிய பத்திரிகைகளை வெளியிடுவது தான் தடை செய்யப்பட்டிருந்தது— என்று நீதி அமைச்சர் நிசங்க விஜயரத்ன தெரிவித்தார். (உ:எ)

ஒய்வூதியர் தினம்

ஒய்வூதியர் தினம் அனுஷ்டிக்க ஆண்டுதோறும் ஒருநாளை ஒதுக்கும்படி அரசுக்குவேண்டுகோள் விடுத்துள்ளது. அஹங்கம அரசு ஒய்வூதியர் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. (இ–எ)

பொய்யாமொழி

குறள்:
அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

பொருள்:
மற்றவர்களோடு ஒத்து நடக்காமல், தன் வலிமையின் அளவையும் அறியாமல், தன்னை வியந்து மதித்துக் கொண்டிருப்பவன் விரைவில் கெடுவான்.

விமானப்படைத்தளத்தை கைப்பற்ற நோக்கம்

கட்டுநாயக்க தாக்குதல் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் கருத்து

கொழும்பு, ஜூன் 11

கட்டுநாயக்கா விமானப்படை தளத்தை கைப்பற்றுவதும் ஞாயிறு அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலின் ஒரு நோக்கம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் கடந்த ஏப்ரலில் பல்லகெல ஆயுதப்படை முகாமில் கொள்ளையிடப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொத்தலாவலை பாதுகாப்பு அக்கடமி மீது நடத்தப்பட்ட தாக்குதலின் நோக்கம் ஆயுதங்களைக் கைப்பற்றுவதே.

தாக்குதல் நடத்தியவர்கள் அந்த நோக்கத்தில் வெற்றி கண்டு விட்டார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

25 ரி-56 தானியங்கி ரைபிள்கள் அங்கு கொள்ளையிடப்பட்டன என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. (இ–எ)

சமய செய்திகளில்

சங்காபிஷேகம்

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் சங்காபிஷேகம் நாளை 12 ஆம்திகதி காலை நடைபெறும். தண்டிகை உற்சவம் மாலை 6. 30 க்கு நடைபெறும். (இ–10)

துர்க்காதேவி ஆலயத்தில்

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தின் விசேஷ பூசை வைகாசி விசாக தினமான செவ்வாய்க் கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

விசேஷ அபிஷேகஆராதனைகளுக்குப் பின் அம்பாள் சிங்க வாகனத்தில் உள்வீதி வலம் வந்தாள். (இ–143)

முஸ். காங்கிரஸ் கண்டனம்

கொழும்பு, ஜூன் 11

ஜனாப் எம்.எச்.எம். அஷ்ரப் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இலங்கையின் ஆகாய எல்லைக்குள் இந்தியா ஊடுருவல்நடத்தியதைக் கண்டித்து உள்ளது.

ஸ்ரீலங்காவின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை அப்பட்டமாக மீறிய செயல் இது—

இப்படி ஜனாப் அஷ்ரப் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

நாட்டை வெளியார் பயமுறுத்தலில் இருந்து காப்பாற்றும் சகல எதிர்க்கட்சிகளுடனும் சேர்ந்து அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்— என்றும் ஜனாப்அஷ்ரப் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (இ–எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

உதயன்

11 — 06 — 1987 வியாழக்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

சிங்கள இராணுவத்தால் தமிழர்களுக்கு பெரும் உயிர்ச் சேதம்

அமெ. செனட்டர் கூறுகிறார்

வாஷிங்டன், ஜூன் 10

இலங்கை இராணுவம் முழுக்க சிங்களவர்களைக் கொண்டது. யாழ் குடா நாட்டில் தமிழருக்கு பெருமளவில் உயிர்ச் சேதங்களை இராணுவ நடவடிக்கைகள் ஏற்படுத்தி உள்ளன.

இப்படி அமெரிக்க செனட்டர் மெர்வின் எம். டிமலி தெரிவித்தார்.

இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளில் தமிழருக்கு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

உயிர்ச்சேதங்கள்பற்றி மதிப்பிட அமெரிக்க நாடாளுமன்றக் குழு ஒன்று ஸ்ரீ லங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று நான் கோருகின்றேன்.

ஐரோப்பிய, இந்திய செய்தி வட்டாரங்களின் படி ஆண், பெண், குழந்தைகள் உட்பட 200 க்கும் 500 க்கும் இடைப்பட்டோர் இராணுவ நடவடிக்கைகளில் கொல்லப்பட்டிருக்கலாம்.

இந்த உயிர்ச் சேதங்களுக்கு இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் மனித உரிமைக் குழுக்களை நாட்டுக்குள் ஸ்ரீலங்கா அரசு அனுமதிக்கவில்லை. இதனால் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்க இடமுண்டு.

மேடைகளில் அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டு இராணுவத் தீர்வு காண்பதில் தான் உள்ளாந்தரமாக இலங்கை அரசு ஈடுபட்டு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

இது ஒரு பாரிய தப்புக் கணக்கு. இது தீர்வுக்கு வழிவகுக்காது. மிதவாதிகளைத் தனிமைப் படுத்தி, தமிழரை ஒதுக்கி, நிரந்தரத் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையை அழித்து விடும்,

இப்படி செனட்டர் மெர்வின் டிமலி தெரிவித்தார்.

இவர் ஜனநாயகக் கட்சிச் செனட்டர். (இ-எ)

தனியார் பஸ்ஸில் சென்ற மூவர் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

திருமலையில் தனியார் பஸ் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த 3 பயணிகள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர் என்று அரசு அறிவித்துள்ளது.

மையில்வய என்னும் இடத்தில் இச் சம்பவம் நடந்தது.

பயணிகளில் 12 பேர் காட்டுக்குள் தப்பி ஓடினர். (இ-எ)

மக்கள் மீண்டும் அச்சுவேலிக்கு; வீதிகளில் சடலங்கள், முண்டங்கள்

கடைகள், வீடுகளில் சூறை

— உதயன் செய்தியாளர்கள் ஞான ஆதவன் – கே. எஸ். ராஜு —

அச்சுவேலி ஜூன் 11

நான்கு தினங்களுக்குப் பின்பு அச்சுவேலிப் பகுதிக்குள் பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்று மீண்டும் பிரவேசித்தனர். நகரம் சுடுகாடு போல் சோபை இழந்த நிலையில் உள்ளது. பிணவாடை வீசியது.

கடந்த சனிக்கிழமை அதிகாலையில் வீடுகளை விட்டு வெளியேறிய அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காடு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நேற்று (புதன்கிழமை) தமது கிராமங்களுக்குள் பிரவேசித்துநிலைமையைஅவதானித்ததுடன் வீடுகளில் இருந்த பெறுமதியான பொருள்களை அப்புறப்படுத்தினர்.

அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனிப் பகுதிகளில் வீதிக்கு வீதி இருபத்தைந்துக்கும் மேற்பட்ட அழுகி உருக்குலைந்த கருகிய சடலங்களும், முண்டங்களும் காணப்பட்டன. சனிக்கிழமை வீடுகளை விட்டு வெளியேறாத பலரை உறவினர்கள்தேடுகின்றனர். இவர்களைப் பற்றி தகவல் எதுவும் இல்லை.

சடலங்களை வீடுகளின் சுற்றுமதிலில் இருப்போர் ரயர்,விறகுகளை போட்டு எரித்தனர்.

வீடுகள் சேதம்

இராணுவம் முகாமில் இருந்து புறப்பட்டு வந்து திரும்பிச் சென்ற பாதைகளில், தங்கி இருந்த பகுதிகளில் உள்ள பல வீடுகள் உடைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் உள்ளன. புல்டோசர்கள் நடமாடியதால் பல புதிய பாதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல மதகுகள் உடைக்கப்பட்டு வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையும்சேதம் அடைந்தது.

இராணுவம் தங்கியிருந்த நான்கு நாட்களிலும்பல வீடுகள்உடைக்கப்பட்டு விறகாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வீடுகளில் விருந்துகள் நடத்திய தடயங்களும் மிகுதி உணவுகளும் காணப்படுகின்றன.

அச்சுவேலி நகரில் உள்ள மினிப்பிரியா, நமசிவாயம் ஸ்ரோர் உட்பட பல கடைகள் உடைக்கப்பட்டு உணவுப் பொருள்களும் வேறு பாவனைப் பொருள்களும் எடுக்கப்பட்டுள்ளன. பல வீடுகளின்மதில்கள்கூரைகள் உடைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் நடமாடிய பகுதிகளில் பாடசாலைகளில் மேசை, கதிரை மற்றும் தளபாடங்கள் வீதிகள் தோறும் வீசப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. பல வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி கல்வி வளர்ச்சிக் கழகம், அச்சுவேலி மத்திய சனசமூக நிலையம் என்பன தீமூட்டி எரிக்கப் பட்டுள்ளன. அச்சுவேலி—சங்கானை வீதிச் சந்தியில் உள்ள மேஜர் அல்பேட் (சுபதநிதி) நினைவுத் தூபி உடைத்தெறியப்பட்டுள்ளது.

கடைகள் ஒவ்வொன்றிலும் இராணுவ அதிகாரியினால் ஒப்பமிடப்பட்டு 87-06-09 எனத் திகதியிடப்பட்ட கடதாசிகள் கதவுகள்சேதப்படுத்தப்படாமையைக் காட்டுவதற்காக ஒட்டப்பட்டிருந்தன.

எனினும் சிலகடைகள் யன்னல் வழியாகவும், பின் கதவு வழியாகவும் உடைத்துக் கொள்ளையிடப்பட்டிருந்தன.

இராணுவத்தினர் அவசரஅவசரமாக வெறியேறியதற்கான தடயமாக அரைகுறையாக கோப்பைகளில் விட்டுச்சென்ற உணவுகள் காட்சி அளித்தன.

பாடசாலைக் கதவுகள் உடைக்கப் பட்டிருந்தன. (இ-11-119)

ஐ. நா. செயலாளர் அவதானிக்கிறார்

ஐ.நா. ஜூன் 11

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான பதற்ற நிலைமை குறித்து ஐ. நா. செயலாளர் நாயகம் பெரஸ்டி. குயிலர் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு வருகின்றார்.

இத்தகவலை அவரே பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார். (இ-எ)

வடமராட்சியில் பொலீஸ் நிலையங்களை திறக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் பொலீஸ் நிலையங்களை திறப்பதற்கு சிப்பாய்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

புலோலி, மந்திகை பகுதிகளில் முதலில் ஆரம்பிக்கப்பட இருக்கும் பொலீஸ் நிலையங்களில் சிங்கள அதிகாரிகளே கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

இதனிடையே சிப்பாய்களின் ரோந்துப் பணி வடமராட்சிப் பகுதியில் தற்பொழுது ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது.

பத்துக்கும் மேற்பட்ட வாகனங்களில் இவர்கள் ரோந்துப் பணி மேற்கொள்கின்றனர். (இ-10)

சத்தியாக்கிரகிகள் மத்தியில் ஐ. தே. க. உயர் பிரமுகர்கள்

கொழும்பு, ஜூன் 11

கொழும்பில் இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றின் வாசஸ்தலத்துக்கு முன்னால் சத்தியாக்கிரகம் இருந்தவர்களில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் செயலாளரான டபிள்யு. எம்.பி. பி.மெனிக்திவல, டாக்டர் எச். டபிள்யு. ஜெயவர்த்தன, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஹர்ஷா அபயவர்த்தன, கொழும்பு மாவட்ட அமைச்சர் விரசிங்க மல்லிமாராச்சி ஆகியோரும் காணப்பட்டனர்.

பல அரசு எம். பிக்களும் சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றினர்.

சத்தியாக்கிரகம் முடிவடைந்த பின்னர் திரு. டிக்ஸிற் வெளிநாட்டுச் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஐக்கியதேசியக் கட்சியும் மகாசங்கத்தின் ஒரு பிரிவும் நடத்தின. அரசாங்கம் தான் இதை நடத்தியது என்று நான் சொல்லியிருக்கலாம். — என்று டிக்ஸிற் கூறினார்.

செய்தியாளர் ஒருவர்:– விமானம் மூலம் உணவுப் பொதிகளைப் போட்டதால் எதை இந்தியா சாதித்தது?

திரு.டிக்ஸிற்:– சாதனைகள் இனித்தான் தெரிய வரும். உணவுப் பொதிகள் விமானம் மூலம் போடப்பட்டவுடன் 900 தொன் உணவுப்பொருள்கள் யாழ் அனுப்பப்படுவதாக கொழும்பு அறிவித்தது.

இவை பற்றி எல்லாம் நான் சொல்லவேண்டியது இல்லை. நீங்களே ஆராய்ந்து பார்த்துக் கொள்ளலாம்.

இதற்கு முதல் வணஞானிஸர தேரர் வாசஸ் தலத்துக்குள் சென்று திரு. டிக்ஸிற்றிடம் மகஜரை கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட திரு. டிக்ஸிற், ''பயங்கரவாதம் ஏன் தோன்றியது என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சகல வன்செயல்களையும் இந்தியா கண்டித்தே வந்திருக்கிறது'' — என்று தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

''யாழ்ப்பாணத்துக்கு மட்டும் ஏன் உணவு? பிஜிக்கும் கொடுக்கலாமே''

''இந்தியா வுடனான ராஜதந்திர உறவைத் துண்டிப்போம்''

''ராஜீவ், உனது வேலையைப் பார்''

இப்படிப்பட்ட கோஷங்கள் எழுதிய சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் வைத்திருந்தனர். (இ-எ)

அந்தச் சூடான செய்தியை தெரிவிக்க

நட்வர்சிங்கின் தொலைபேசியே பயன்படுத்தப்பட்டது

புதுடில்லி, ஜூன் 10

விமானம் மூலம் யாழ் குடாநாட்டில் இந்தியா உணவுப் பொதிகளைப் போட இருக்கின்றது என்ற செய்தியை புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் திரு. பொன்னுத்திலகரத்தினா, இணை அமைச்சர் நடவர் சிங்கின் அலுவலக தொலைபேசி மூலமே இலங்கை அரசுக்கு அறிவித்தார்.

இத்தகவலை ''இந்து'' வெளியிட்டிருக்கின்றது.

விமானம் மூலம் உணவுப் பொதிகள் போடப்படவுள்ள செய்தியை இந்தியா இலங்கைக்கு 35 நிமிடங்களுக்கு முன்னதாகவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதற்காக திரு. திலகரத்னாவை இணை அமைச்சர் நட்வர்சிங் தனது அலுவலகத்துக்கு அழைத்தார். விமானப் பயணத்தைத் தெரிவித்தார்.

இது பற்றி செய்தியாளர்களிடம் திரு. நட்வர்சிங் தெரிவிக்கையில், ''இலங்கை அரசுக்கு தகவலைத் தெரிவிக்க மட்டுமல்ல, கொழும்பில் இருந்து பதிலைப் பெறவும் அவர் எனது தொலைபேசியைத்தான் பாவித்தார்'' என்றார்.

இனப்பிரச்சினை மத்தியஸ்தர் என்ற முறையில் நட்வர்சிங்கின் அலுவலகத்துக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (இ-எ)

மறியல் போர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களை இந்தியா அங்கீகரிக்கக் கோரி நல்லூர் அரசடி ஜன சக்தி சனசமூக நிலையத்தில் நேற்று 3 மணி முதல் 7 மணி வரை மறியல் போராட்டம் நடைபெற்றது. (இ-எ)

மத்தியஸ்தம் செய்ய பங்களாதேஷ் தயார்

டாக்கா, ஜூன் 10

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பதற்ற நிலையைத் தணிக்க பங்களாதேஷ் ஜனாதிபதி லெப்டினன்ட் ஜெனரல் முகமது எர்ஷாத் மத்தியஸ்தம் செய்ய முன்வந்திருக்கிறார்.

இத்தகவலை பங்களாதேஷ் வெளியுறவுச் செயலாளர் ஜனப். நஸ்ருல் இஸ்லாம் தெரிவித்தார். (இ-எ)

யாழ்ப்பாண வானொலி இப்படி எச்சரிக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 11

பொதுமக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் வானொலி மூலம் நேற்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வானொலி எச்சரிக்கையில் ''தீவிரவாதிகளின் முகாம்களுக்கு அண்மையில் இருக்கும் மக்கள் படையினர் கொடுக்கும் சிறிய நேர அறிவிப்பைப் பயன்படுத்தி உடனடியாக வெளியேற ஆயத்தமாக வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

எங்கே, எப்போது நாம் நகர உள்ளோம் என்பதை போதிய அவகாசத்துடன் படையினர் அறிவிப்பார்கள்.

உங்களுக்கு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டதும் எவ்வளவு விரைவாக வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவில் பாடசாலைகளில் சென்று தஞ்சமடையுங்கள்.

இவ்வாறு படையினர் யாழ்ப்பாணம் வானொலி மூலம் தெரிவித்தனர். (இ-எ)

ரத்து

சென்னை, ஜூன் 11

உதக மண்டலம் ராஜ்பவனில் தமிழ்நாடு ஆளுநர் எஸ். எல். குரானா கடந்த வியாழன் நடத்த இருந்த தேனீர் விருந்துபசார வைபவம் இலங்கை நிலைமை காரணமாக ரத்துச் செய்யப்பட்டது.

இப்படி ராஜ்பவன் செய்திக் குறிப்பு ஒன்று கூறியது. (இ-எ)

இடம்மாற்ற அறிவித்தல்

தற்போதைய சூழ்நிலை காரணமாக, ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், பாதுகாப்பை முன்னிட்டு எமது ஸ்தாபனம் கீழ் வரும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்
333, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
(3204)

இந்தியக் கொடியின்கீழ் வாழத் தயாரில்லை

தேரர் டிக்ஸிற்றுக்கு மகஜர்

கொழும்பு, ஜூன் 11

இந்தியாவை மதிக்கின்றோம். இந்தியாவின் தேசியக் கொடியைக் கௌரவிக்கின்றோம். ஆனால் இந்தியக் கொடியின் கீழ் ஒரு நாடாக வாழ நாம் தயாராக இல்லை.

இப்படி வண கல்பொட ஞானிஸர நாயக்க தேரர் இந்தியத் தூதரிடம் சமர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய குறுகிய நோக்கம் கொண்ட இந்திய ஆட்சியாளர்கள் சுதந்திரம்,மனித உரிமைகள் பற்றிய எமது கோரிக்கைகள் குறித்து உணர வேண்டும்.

எமது அமைதியான போராட்டம் குறித்து விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியா வாழ்க! குறுகிய நோக்கம் கொண்ட இந்திய ஆட்சியாளர் [illegible] கட்டும் – இப்படி அம் [illegible] மகஜரில் [illegible] ளது. (இ-எ)

இராணுவ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டபின்னர், 'வரையறுக்கப்பட்ட தாக்குதல்' என்று அமைச்சர் கூறி இராணுவ நடவடிக்கைகளை எடுத்தார்.

இப்போது இராணுவம் தன்னைப் 'பலப்படுத்திக் கொள்கின்றது' என்று அவர் கூறினாலும் யாழ் குடாவில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் கிடைத்து உள்ளன.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தனது கருத்து மதிப்பீட்டில் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

ராஜீவை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உதவிகளை தொடர்ந்து வழங்குவது பற்றியே எம். ஜி. ஆர். இணை அமைச்சருடன் பேசியதாக அறிவிக்கப்பட்டது. (இ-எ

இந்தியா----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

போதைக்கு நிறுத்தி வைத்திருப்பதாக லலித் அத்துலத் முதலி கூறியிருப்பது பற்றி கேட்டபோது—

அந்த அதிகாரி பதில் சொல்ல மறுத்துவிட்டார்.

இலங்கை நிலைமை பற்றிஇந்திய அரசு சிநேக நாடுகளுக்கு அடிக்கடி எடுத்துக் கூறி வருகின்றது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-எ)

விமானம் மூலம் கிழக்குக்கும் உணவுப் பொதி போடுமாறு ஈரோஸ் கோருகிறது

சென்னை, ஜூன் 10

கிழக்கு மாகாணத்தில் உள்ள சுமார் ஐம்பதினாயிரம் தமிழ் அகதிகளுக்கும் இந்திய அரசு விமானம் மூலம் உணவுப் பொதிகள் போடவேண்டும்.

ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. வி. பாலகுமார் சென்னையில் முன்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள இந்த அகதிகளுக்கு பங்கிட்டு உணவுப் பொருள்கள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் திரு. பாலகுமார் தெரிவித்தார். (இ-எ)

வல்லையில் - - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தமது அனுபவத்தைக் கூறியதாவது:–

வடமராட்சியிலிருந்து காலித் துறைமுகம் செல்லும்வரை சிப்பாய்கள் எம்மை சப்பாத்துக் கால்களால் உதைத்தபடி இருந்தனர்.

புலிகளின் இருப்பிடங்களையும், தகவல்களையும் எம்மிடம் கேட்டபடி கடல் நீரை குடிக்கும்படி வற்புறுத்தனர்.

பெண்கள் உட்பட 6500 பேர்வரை கப்பலில் கொண்டுசெல்லப்பட்டோம்.

சில இளைஞர்கள் துறைமுக வேலைகளுக்காக காங்கேசனில் மறித்து வைக்கப்பட்டனர்.

சாரம்

காலியில் எம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சாரம் வழங்கப்பட்டது.

திடீரென 9ஆம் திகதி எங்களில் 89 பேரை கப்பல்மூலம் பலாலிக்குக் கொண்டுவந்தனர்.

பலாலி முகாமில் முகமூடி தலையாட்டியதால் எம்முடன் வந்த ஓர் இளைஞர் மீண்டும் தடுத்து வைக்கப்பட்டார்.

எங்களுக்கு பலாலியில் கொக்கா கோலா குடிக்கத்தந்து வீடியோ படம் எடுத்தனர்.

இவ்வாறு விடுதலையான மண்டான் இளைஞர் கூறினார்.

விடுதலையான இளைஞர்களின் கைகளில் காயங்கள் காணப்பட்டன. காயங்களுக்கு மருந்து இடப்பட்டிருந்தது.

கயிற்றினால் கைகள் கட்டப்பட்டதாலும், எஸ்லோன் பைப்புகளினால் தாக்கப்பட்டதாலும் காயங்கள் ஏற்பட்டன என்று இளைஞர்கள் கூறினர். (இ-எ-160)

இனக்கொலையை நிறுத்தக் கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 10

இலங்கையில் இனப்படுகொலை நடத்தப்படுவதை இந்திய மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

இப்படி புதுடில்லி உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. (இ-எ)

யாழ். ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காயமடைந்திருந்த ஏராளமானோர் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்தே இந்த இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல அவசர நோயாளர்கள் கூட தரையில் இருந்தே சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ-10)

இராமேஸ்வரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடிக்கச்சென்றனர்.

இந்தியக் கடலோரக் காவல்படை மீனவர்களுக்கு முழுப் பாதுகாப்பை அளித்து வருகின்றது. (இ-எ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 11-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Thursday June 11, 1987 Registered as a Newspaper at the General Post office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org